செ.வெ.எண் - 12 நாள்-09.04.2019

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு வாக்குச்சாவடி மையங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள வசதிகள் குறித்து ஆலோசனைக் கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தலைமையில், கைத்தறி மற்றும் துணிநூல் முதன்மை செயலாளர் / தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் மற்றும் சிறப்பு பார்வையாளர் (மாற்றுத்திறனாளிகள்) **முனைவர்.பி.சந்திர மோகன், இஆப.,** அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

**இக்கூட்டத்தில், சிறப்பு பார்வையாளர் (மாற்றுத்திறனாளிகள்) அவர்கள் தெரிவித்ததாவது,**

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2019 முன்னிட்டு அரியலூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் வாக்காளர்கள் வாக்குச்சாவடிக்கு எளிதில் சென்று வாக்களிக்கும் வகையில் சாய்தளத்துடன் கூடிய படிகட்டுகள் அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் அமைக்கப்பட்டத்துடன், அவர்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அரியலூர், ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதிகளில் 18-வயதிற்கு மேற்பட்ட 7638 மாற்றுத்திறனாளிகள் வாக்காளர்களாக உள்ளனர். மேலும், வாக்குப்பதிவு நாளன்று வாக்குச்சாவடி மையங்களில் மாற்றுத்திறனாளிகளின் வசதிக்காக அரியலூர், ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதிகளில் 587 வாக்குச்சாவடி மையங்களில், அரியலூர் சட்டமன்ற தொகுதியில் 184 மையங்களிலும், ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதியில் 147 வாக்குச்சாவடி மையங்களிலும் எனமொத்தம் 331 வாக்குச்சாவடி மையங்களில் மாற்றுத்திறனாளிகள் வாக்களிக்கவுள்ளனர். மாற்றுத்திறனாளிகளின் பயன்பாட்டிற்காக வாக்குச்சாவடி மையங்களில் 253 சக்கர நாற்காலிகள் பயன்படுத்தப்படவுள்ளன. மேலும், வாக்குச்சாவடி மையங்களில் மாற்றுத்திறனாளி வாக்காளர்களுக்கு தேவையான உதவிகளை பெறுவதற்காக (Person with Disability) PWD என்னும் செயலியும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலமாக மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் வாக்களிக்க வரும்போது, சக்கர நாற்காலிகளும் மற்றும் உபகரணங்களை பதிவு செய்து பயன்படுத்திக்கொள்ளலாம் என கைத்தறி மற்றும் துணிநூல் முதன்மை செயலாளர் / தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் மற்றும் சிறப்பு பார்வையாளர் (மாற்றுத்திறனாளிகள்) **முனைவர்.பி.சந்திர மோகன், இஆப.,** அவர்கள தெரிவித்தார்கள்.

முன்னதாக, அரியலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கோவிந்தபுரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் உள்ள 2 வாக்குச்சாவடி மையங்களையும், எருத்துக்காரன்பட்டி அரசு ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி 1 வாக்குச்சாவடி மையத்தினையும், அரியலூர் மான்போர்ட் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் 3 வாக்குச்சாவடி மையங்களையும், அரியலூர் ஆர்.சி.நிர்மலா காந்தி நடுநிலைப்பள்ளியில் உள்ள 5 வாக்குச்சாவடி மையங்களையும், அரியலூர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் உள்ள 3 வாக்குச்சாவடி மையங்களையும் என ஆகமொத்தம் 11 வாக்குச்சாவடி மையங்களை ஆய்வு செய்து, மாற்றுத்திறனாளிகளிடம் கருத்துகளை கைத்தறி மற்றும் துணிநூல் முதன்மை செயலாளர் / தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் மற்றும் சிறப்பு பார்வையாளர் (மாற்றுத்திறனாளிகள்) **முனைவர்.பி.சந்திர மோகன், இஆப.,** அவர்கள கேட்டறிந்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் பொற்கொடி, திட்ட இயக்குநர் (ஊரகவளர்ச்சிமுகமை) சுந்தர்ராஜ், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் நா.சத்தியநாராயணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) தா.பரிதாபானு, தேர்தல் வட்டாட்சியர் சந்திரசேகரன், பொறுப்பு அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், 6 சட்டமன்ற தொகுதி வட்டாட்சியர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**